கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) :—சேலம் மாவட்டத்தில் உணவு உற்பத்திக் கோட்டம் (Food Production Division) ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய ஆணைகள் 1963 நவம்பர் 18-ம் தேதியில் வெளியாயின. மேற்படி கோட்டம் 1963 டிசம்பர் 11-ம் தேதி முற்பகல் நிறுவப்பட்டது. ஆனால், சிக்கன ஏற்பாடாக அரசாங்கம் இதனை மறு பரிசீலனைசெய்து, அக் கோட்டத்தைக் கலைக்கும்படி 1963 டிசம்பர் 27-ல் ஆணையிட்டது. 1964 ஜனவரி 2-ம் தேதி பிற்பகலில்தான் இக் கோட்டம் கலைக்கப்பட்டது. பின்னர் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உணவு உற்பத்திக் கோட்டம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் மீண்டும் புதிதாக அனுமதி வழங்குகிறது. 1965 ஜனவரி 27-ம் தேதியில் நிறுவப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

திரு. ம. கமலநாதன் : இந்த "புட் ப்ரொடக்ஷன் ஆஃபீஸ்" சேலத்தில் திறக்கப்பட்டு 10 நாளில் மூடிவிட்டார்கள். முதலில் அலுவலகம் திறப்பதற்கென்று டேபிள், சேர் எல்லாம் வாங்கப்பட்டு ஆஃபீசர்கூட வந்துவிட்டார். பத்து நாளில் ஆஃபீசை "க்ளோஸ்" பண்ண உத்தரவு வந்து ஆஃபீஸ் மூடப்பட்டது. தொடங்கப்படுவதற்கு முன்பேயே இந்த அலுவலகம் தொடர்ந்து பணி ஆற்ற முடியும் என்ற அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவே உத்தரவு இட்டு இங்கே அந்த டிவிஷனை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டம் இட்டு இருந்தார்கள். எமர்ஜென்ஸி காரணமாக, பணக் கஷ்டத்தின் காரணமாக இதை மீண்டும் திறப்பது நல்லதில்லை என்று சொன்னார்கள். நான் அந்த வட்டாரத்தில் டூர் பண்ணப் போனபோது, கலெக்டரைச் சந்தித்தேன். உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் பல வேலைகளைச் செய்ய இந்த ஆஃபீஸ் இருந்தால் நல்லது என்று கேட்டுக்கொண்டார்கள். மறுபடியும் பரிசீலனை செய்து, போர்ட் மெம்பர், சூப்பரிண்டென்டிங் என்ஜினீயர், சீஃப் என்ஜினீயர் இவர்களோடு கலந்து பேசி, இந்த வட்டார மக்களுக்கு மீண்டும் உதவி செய்யப் புதிதாக டிவிஷனைத் திறக்க ஏற்பாடு செய்து இருக்கிறது.

Consumers Co-operative Stores for Industrial workers

* 320 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the steps taken for the regular supply of rice to the consumer co-operatives of industrial workers; and

(*b*) the details of requirements of rice for these societies each month?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இம் மாநிலத்தில், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான பயன்கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவையான அரிசியை, மாவட்டக் கூட்டுறவு சப்ளை-விற்பனைச் சங்கங்களிடமிருந்து அல்லது அவை இணைந்துள்ள சம்பந்தப்பட்ட மொத்த வாணிபப் பண்டகசாலைகளிடமிருந்து பெறுகிறார்கள். மதுரை ஆலைத்தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை போன்ற தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பெரிய பண்டகசாலைகளில் சில அறுவடைக்காலத்தில் உள்ளூரிலோ வெளியிடங்களிலோ நெல் அல்லது அரிசியைக் கொள்முதல் செய்து, அவைகளின் உறுப்பினர்களுக்கு அரிசிப் பங்கீடு செய்ய ஏற்பாடு செய்கின்றன. உள்ளூர் சிவில் சப்ளை அதிகாரிகளின் பங்கீட்டு ஆணைகள்மூலம் மேற்படி பண்டகசாலைகளுக்கும் அரிசி வழங்கப்படுகிறது. மொத்த வாணிபப் பண்டகசாலைகளும், தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளிட்ட பயன்கொள்வோர் பெரிய பண்டகசாலைகளும் உணவுத் தானியங்களையும் பிற இன்றியமையாப்பொருட்களையும் மொத்தமாக வாங்குவதற்கு மாநில அரசாங்கம் அளிக்கும் உத்தரவாதத்தின்பேரில், இந்திய ஸ்டேட் பாங்கு அவசியமான கடன் வசதிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

24th March 1965]

(இ) பயன்கொள்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளின் உறுப்பினர்களுக்கு வழங்க மாதம் ஒன்றுக்கு புழுங்கல் அரிசியும் பச்சரிசியும் சுமார் 5,000 டன் வரையில் தேவைப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கான பயன்கொள்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் மாநிலத்தில் மொத்தம் எவ்வளவுள்ளன ? எவ்வளவு தொழில்கள் இதனுல் பலன் பெற்றிருக்கின்றன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இப்போது 132 இன்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸ் ஸ்டோர்ஸ் இருக்கின்றன. நூற்றி நாற்பத்திரண்டு எஸ்டாப்ளிஷ்மெண்டும், 132 ஸ்டோர்ஸும் இருக்கின்றன. நாற்பத்திநான்கு ப்ளான்டேஷனுக்கு 36 கூட்டுறவு ஸ்டோர்ஸ் இருக்கின்றன.

திருமதி சி. குழந்தையம்மாள் : கோயம்புத்தூர் ஜில்லாவிலே நூற்பு ஆலைகளிலே கூட்டுறவு பயன்கொள்வோர் பண்டகசாலைகள் இருக்கின்றன. ஐம்பது அல்லது 100-க்குமேல் தொழிலாளிகள் வேலை செய்யவில்லை என்பதால் சில இடங்களில் முதலாளிகள் மறுக்கிறார்கள். தக்க காரணங்களை ஆராய்ந்து இப் பண்டகசாலைகளை அமைக்க அமைச்சர் முன்வருவாரா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : எல்லா ஆலைகளிலும் அநேகமாக 50 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களையும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதில் ஏதாவது தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால் கனம் அங்கத்தினர் கூறியதுபோல் அங்கே இருக்கக் கூடிய முதலாளிகள் ஒத்துழைப்பு குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அவசியமாகச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது அமைச்சர் கொடுத்த கணக்கிலிருந்து இம்மாதிரி கூட்டுறவு பண்டகசாலைகள் மிகவும் குறைவு என்று தெரிகிறது. கோயம்புத்தூர் ஜில்லா தொழில் பிராந்திய ஜில்லா. அங்கே துரிதமாக இப்பண்டகசாலைகளைத் துவக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இந்த ஆண்டிலே அவசியமாகக் கருதியதால் " ப்ளான்டேஷனிலே " இந்த கூட்டுறவு ஸ்டோர்ஸ் அமைக்கப்பட்டு இருக்கிறது. இது போக பாக்கி இருக்கும் 203 இன்டஸ்ட்ரியல் எஸ்டாப்ளிஷ்மென்டிலும் வைக்கவேண்டுமென்று நிச்சயமாக வற்புறுத்தி வருகிறோம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் இம்மாதிரி 16 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் இருக்கின்றன. அவைகளிடம் வாங்காமல் வேறு தனிப்பட்ட வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள். அங்கங்கே நிறைய ஸ்டாக் இருக்கின்றன. இம்மாதிரி சங்கங்களிலே தானியங்களை வாங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இது தனிப்பட்ட கேள்வி. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

Rice mills in the Public Sector

* 321 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to start rice mills in the Public Sector?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இல்லை. திருவாரூரிலுள்ள, தஞ்சை கூட்டுறவு விற்பனை பெடரேஷன் லிமிடெட், கூட்டுறவுத் துறையில் நவீன அரிசி ஆலை ஒன்றை நிறுவி வருகிறது. அடுத்த ஆண்டில் சுமார் 31 (முப்பத்தொன்று) பெரிய அரிசி ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.